**குளியாபிடிய நகர சபை - 2022**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாபிடிய நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கிய அதன் செயற்பாடுகள் தொடர்பாக நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து குளியாபிடிய நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு,

நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கைதவிர்ப்புச் செய்யப்படாத 318 நூல் நிலையப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 43,600 நூல்நிலைய புத்தக கணக்குகளிலிருந்து நீக்கப்படவில்லை | கணக்கீடு செய்வதற்காக அடுத்துவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 9,495 கிலோகிராம் சேதன பசளையின் பெறுமதி ரூபா 1,113,940 கணக்கீடு செய்யப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிகக்கும் போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 9,682,040 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன் மீதியை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்கு இணங்க மொத்தத்திற்கும் பட்டோலைகளின் அமாத்திற்கும் இடையே ரூபா 28,760,311 பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும்.. |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 587 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 8,755,545 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தீர்த்துவைக்கப்படவில்லை. | நீண்டகால குத்தகைக்கு வழங்கிய ஆதனங்களின் வைப்புக்களை விடுவிக்க முடியாதுள்ளதுடன் இனங்காணப்பட்ட ஏனைய வைப்புக்களை விடுவிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 3,134,250 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 27,042,883 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமான | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | '000 | '000 | '000 | '000 | '000 | '000 | '000 | '000 |
| வீத வரியும் வரியும் | 28,674 | 267,357 | 26,867 | 28,195 | 28,742 | 27,993 | 19,181 | 29,620 |
| வாடகை | 216,636 | 21,064 | 20,059 | 3,197 | 111,505 | 14,428 | 13,641 | 2,440 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 17,930 | 12,196 | 12,088 | - | 17,451 | 7,599 | 7,599 | - |
| ஏனைய வருமானம் | 44,814 | 123,022 | 295,935 | 14,008 | 36,783 | 114,466 | 94,768 | 15,816 |
| மொத்தம் | 308,054 | 423,639 | 354,949 | 45,400 | 194,481 | 164,486 | 135,189 | 47,876 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,768,510 தொகையான ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படும் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல், பொதுமக்களின் நலவாழ்வு, வசதிகள், நலன்புரிகள் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **உப நியதிச்சட்டம்** | | |
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் சம்பந்தமாக உப நியதிச்சட்டம் விதிக்க கூடியதாக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரையும் எந்த விடயத்திற்காகவும் சபையினால் உபநியதிச்சட்டம் விதிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நடமாடும் வியாபாரம் சம்பந்தமாக உப நியதிச்சட்டம் வரைபாக்கப்பட்டுள்ளது. | சபைக்குரிய உபநியதிச் சட்டங்களை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| குளியாபிடிய நகர சபையினால் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய பொதுச் சந்தை மற்றும் பல்நோக்கு கட்டிடத்தின் நிர்மாணங்கள் சம்பந்தமாக ஒப்பந்த நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க 2020 யூலை 06 ஆந் திகதியிலிருந்து 540 நாட்களுக்குள் உரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் பௌதீக | நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதாரமும் நிதிச் சிக்கலும் காரணமாகும். | திட்டமிட்டவாறு நடவடிக்கைகளை பூர்த்திசெய்தல் வேண்டும். |

செயல்முன்னேற்றம் 60 சதவீதமாகவும் நிதிசார் செயல்முன்னேற்றம் 48 சதவீதமாகவும் இருந்தது.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 விடயங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதிகளின் மொத்தம் ரூபா 45,495,973 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றிற்கு மத்தியில் ரூபா 4,123,716 தொகை 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாகும். | நிலுவைப் பணத்தை சேகரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | உரிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 19 கணக்கு வகைகள் தொடர்பான மொத்த பெறுமதி ரூபா 185,607,950 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றிற்கு மத்தியில் ரூபா 4,977,779 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாகவும் ரூபா 4,204,454 தொகை 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதியாகவும் இருந்தது. | நீண்டகாலமாக குத்தகைக்கு வழங்குகின்ற ஆதனங்களின் வைப்புக்களை விடுவிக்க முடியாதுள்ளதுடன் இனங்காணப்பட்ட ஏனைய வைப்புக்களை விடுவிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய மீதிகளை துரிதமாக தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க பொதுக் களஞ்சிய கணக்கிலுள்ள மீதி ரூபா 43,298,299 ஆக இருந்த போதிலும் வருடாந்த மீளாய்வு அறிக்கைக்கு இணங்க கணிப்பீடு செய்யப்பட்ட களஞ்சிய கணக்கின் மீதி ரூபா 14,799,988 ஆக இருந்ததுடன் அதற்கிணங்க பொதுக் களஞ்சியத்தில் ரூபா 28,498,311 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. பொதுக் களஞ்சியத்தின் இருப்புக் | நீண்டகாலமாக இடம்பெற்றுள்ள பல்வேறு குறைபாடுகளினால் இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. அடுத்துவரும் காலங்களில் மீண்டும் கவனமாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சிறப்பாக களஞ்சிய கட்டுப்பாட்டினைப் பேணுதல் வேண்டும். |

குறைவு சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

#### (அ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 5 ஊழியர்கள் தொடர்பான மொத்தமாக ரூபா 40,600 தொகையான அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் தகிதி வரை காணப்பட்டது. | அவர்களின் கடன் பணத்தை பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் ஓய்வூதிய பணிக்கொடை பெற்றதன் பின்னரும் மரணப் பணிக்கொடையைப் பெற்ற பின்னரும் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை தீர்த்துவைத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் நிலையான சொத்தக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றக்களின் பட்டோலைகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 12,758,900 தொகையான 12 வாகனங்கள் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பதிவேட்டினை முறையாக நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். |

#### (ஆ) பொறுபேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் பேணப்படுகின்ற 05 மயானங்களும் 05 காணிகளும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பொறுப்பேற்க்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களை முறைப்படியாக பொறுப்பேற்றல் வேண்டும். |

**(இ) பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| திருத்தம் செய்வதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சபையின் பொப் கெட் இயந்திரத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை திருத்தம் செய்தல் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. சபையின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் 03 சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | கை உழவு இயந்திரத்தை கைதவிர்ப்பின் மூலம் ஏலமிடப்பட்டும் வாங்குவதற்கு முன்வராமை.<br><br>புல்வெட்டும் எக்ரிமேட் இயந்திரங்கள் அடுத்துவரும் காலங்களில் ஏலமிடுவதற்கு நியர்ணயிக்கப்பட்டள்ளது. | சபையின் சொத்துக்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 7 வருமான விடயங்களுக்கு மத்தியில் 4 விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையேயான முரண்கள் 26.6 சதவீதத்திலிருந்து 149 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. 09 செலவு விடயங்களுக்கு மத்தியில் 05 செலவு விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 29 சதவீத்திலிருந்து 65 சதவீதம் வரையான நிதி ஏற்பாடு ஆண்டின் போது செலவு செய்யப்படாது சேமிப்பாகக் காணப்பட்டது. | புதிய பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் பூர்த்திசெய்யப்படாததனால் மதிப்பீடு செய்யப்பட்ட கடை வாடகை வருமானத்திற்கும் உள்ளபடியான கடை வாடகை வருமானத்திற்குமிடையே அதிகளவான வித்தியாசத்தை காட்டுவதற்கு காரணமாக இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டினைத் தயாரிப்பதற்கும் நிதி ஏற்பாட்டினை சிறப்பாக பயன்படுத:துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |